
# 16 திருக்கோணேச்சரம்



கோணேஸ்வரர்

ஈழத்தில் பாடல்பெற்ற திருத்தலங்களில் திருக் கோணேச்சரமும் ஒன்றாகும். இது இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ளது. திருகோணமலை நகரத்தில் சுவாமிமலை என்ற குன்றின் உச்சியிலே இத்தலம் அமைந்துள்ளது. இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளிற்கு முன்னரே இந்துக்களின் புனித தலங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது.



மாதுமை அம்பாள்

இத்தலத்தின் இறைவன் திருக்கோணேச்சரநாதர், இறைவி மாதுமையம்பாளுடன் வீற்றிருந்து அருள் புரிகின்றார். இத்தலத்தின் தீர்த்தம் பாவநாசம், தலவிருட்சம் கல்லாலமரமாக விளங்குகின்றது. கோணேசர் மலையானது மகாமேரு மலையின் சிகரங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

இத்தல வரலாற்றினை அறிந்து கொள்ள உதவும் நூல்களாக தட்சிணகைலாய புராணம், திருக்கோணேச்சரபுராணம், கோணேசர் கல்வெட்டு போன்றவற்றைக் குறிப்பிடலாம். இத்தலத்திற்கு திருப்பணிகள் செய்த



மன்னனாக குளக்கோட்டன் கருதப்படுகிறார். இத்தலம் இராவணன் காலத்திற்கு முற்பட்ட சிவாலயம் என்பது ஐதீகமாகும்.

கி.பி 1624 ஆம் ஆண்டு கொன்ஸ்ரன்டைன் டிசா என்ற போர்த்துக்கீச தளபதியால் இவ்வாலயம் தரை மட்டமாக்கப்பட்டு பின்னர் முந்நூற் றைம்பது ஆண்டு கட்குப் பின் சைவமக்கள் மீண்டும் இவ் வாலயத்தை உருவாக்கினார்கள். இவ் ஆலயச்சூழலில் கி.பி 1950 ஆம் ஆண்டிலே பல விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டன. சைவ அடியார்களின் முயற்சியால் புதிய கோயில் அமைக்கப்பட்டது. கி.பி 1963 ஆம் ஆண்டில் இவ்விக்கிரகங்கள் பிரதிட்டை செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகமும் இடம்பெற்றது.



புராதன சோமஸ்கந்தர்

தட்சிண கைலாயம் எனப்போற்றப்படும் இத்தலத்தின் மீது திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர் என்போர் பாடல்களைப் பாடியுள்ளனர். இவ்வூரின் மலைகள் திரிகோண வடிவில் அமைந்திருப்பதாலும் தெய்வீகச் சிறப்புற்று விளங்குவதாலும் திருகோணமலை என்று சிறப்பிக்கப் படுகின்றது.

முன்னொரு காலத்தில் இலங்கையை ஆண்ட சிவ பக்தனான இராவணனது இஷ்ட தெய்வமாக திருக் கோணேசர் விளங்கினார் என்றும் தினமும் ஆலயத்திற்கு வந்து பூசித்துச் சென்றான் என்றும் கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன. கோணமலையில் இராவணன் வாளால் வெட்டி மலையெடுத்த



இராவணன் வெட்டு

இடம் இராவணன் வெட்டு என்று அழைக்கப்படுகின்றது.

ஆயிரம் தூண்கள் அணிசெய்யும் கோயில் என்று போர்த்துக்கேயன் ஒருவன் இவ்வாலயத்தைப் புகழ்ந்துள்ளான். இத்தலம் கோணபர்வதம், திரிகோணம், திரிகூடம், மச்சேஸ்வரம் முதலிய பெயர்களால் அழைக்கப்படுகிறது.

இக்கோயிலில் ஆறுகாலப்பூசைகள் தினமும் இடம் பெறுகின்றது. இக்கோயிலின் மகோற்சவம் பங்குனி உத்தரத்தில் கொடியேற்றத்துடன் தொடங்கி பதினெட்டு நாட்களிற்கு நடைபெறுகின்றது.



தேர்திருவிழா

இங்கு தேர் வலமும் இடம்பெறும். இதன் தீர்த்தம் பாபநாசதீர்த்தமாகும். இந்த ஆலயத்தில் சிவராத்திரி தினம் மிகச் சிறப்பாக நடைபெறுவதோடு கோணேசர் நகர் வலம் வரும் காட்சியும் நகரத்தின் காட்சியும் கண்கொள்ளாக் காட்சியாகக் காணப்படுகின்றது.

திருக்கோணேஸ்வர திருப்பதிகம், கோணஸ்வரர் அகவல் முதலியன இக்கோயில் மீதெழுந்த இலக்கியங்கள்ஆகும். இவற்றைவிட திருக்கோணேச்சர ஆலய வரலாறு, திருகோணமாமலை, கோணகிரீசர் அட்டகம், திருகோணமலையந்தாதி முதலியவற்றிலும் இவ்வாலய வரலாற்றினை அறிந்துகொள்ளலாம்.



பாவநாச தீர்த்தம்

## பயிற்சிகள்

திருக்கோணேச்சரநாதர், கிழக்கு, மாதுமையம்பாள், 1624, தட்சிணகைலாயபுராணம், குளக்கோட்டன், போர்த்துக்கீசரால்.

1. திருக்கோணேச்சரம் ................................ மாகாணத்தில் அமைந்துள்ளது.
2. இத்தல இறைவன் ................................ இறைவி ................................ ஆவார்.
3. இத்தலவரலாற்றை கூறும் பிரதான நூல் ................................ ஆகும்.
4. இத்தலத்திற்கு ................................எனும் மன்னன் திருப்பணிகளை செய்துள்ளான்.
5. இவ்வாலயம் ................................ ஆண்டு ................................ அழிக்கப்பட்டது.

**சுருக்கமான விடை எழுதுக.**

01 . இராவணனை நினைவுபடுத்த இக்கோயிலிலுள்ள சான்று யாது?

02 . இவ்வாலய தீர்த்தம் யாது?

03 . இவ்வாலயத்தின் மீது பாடல்களைப் பாடியவர்கள் யாவர்?

04 . புதிய கோயில் அமைக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்ற ஆண்டு யாது?

## செயற்பாடு

★ உமது ஊரிலுள்ள பிரசித்திபெற்ற ஆலயமொன்றின் சிறப்புக்களைத் தேடியறிந்து வகுப்பறையில் கலந்துரையாடுக.

## பாடச்சுருக்கம்

- ★ இலங்கையின் கிழக்கே இவ்வாலயம் அமைவு பெற்றுள்ளது.
- ★ குளக்கோட்ட மன்னன் இவ்வாலயத்திற்குத் திருப்பணிகள் செய்துள்ளான்.
- ★ இத்தல இறைவன் - திருக்கோணேச்சரநாதர், இறைவி - மாதுமையம்பாள், தலவிருட்சம் - கல்லாலமரம்
- ★ திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர் போன்றோர் இத்தலத்தின் மீது பதிகங்களைப் பாடியுள்ளனர்.
- ★ கி.பி 1624 இல் இவ்வாலயம் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டு 350 ஆண்டுக்கு பின்னர் சைவமக்களால் இவ்வாலயம் புனரமைக்கப்பட்டது.